தலைப்பு 229 சட்டமா அதிபர் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 229 - சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 24 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) சென்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளை சமர்பித்தல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 31 டிசம்பர் 2023 இன் வங்கிக் அறிக்கையின்படி வங்கி மீதி ரூபா.9,906,350 ஆக இருந்தபோதிலும், நிதிநிலை அறிக்கையின் இணைப்பில் (viii) வங்கிக் கணக்குகளின் உண்யையான அறிக்கையின் படி வங்கி மீதி ரூபா.5,903,350 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2023 டிசம்பர் 31, நிலவரப்படி, வங்கி அறிக்கையின்படி வங்கி மீதி ரூபா.9,906,350 ஆகும், மேலும் டிசம்பர் மாதத்தில் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா.5,903,350 காசோலையின் மதிப்பானது வங்கி அறிக்கையின்படி மீதியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. புறக்கணிப்பு. | நிதிநிலை அறிக்கையில் உள்ள வங்கிக் கணக்குகளின் மீதி, வங்கி அறிக்கையின்படி மீதி, என்பன சரியாகக் காட்டப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமான பெறுவனவுகள்**

திணைக்களத்திற்குரிய வருமான பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வருடத்தில் அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா.47,600 மதிப்பானது, காசுப்பாய்சல் கூற்றில் உரிமைகோரல்களை திரும்பப் பெறுதல் மற்றும் சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகியவற்றின் கீழ் முதலீட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்சலின் கீழ் காட்டப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அது செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | இதர வருமானக் குறியீடு 20-06-02-02 க்கு முறைகேடான வருமானம் செலவு வைக்கப்பட்டதால், பிற வருமானத் தலைப்புக்களின் சார்பாக வசூலிக்கப்படும் வருமானமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. | சொத்துக்களை விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் காசுப்பாய்சல் கூற்றில் துல்லியமாக பிரதிபலிக்க வேண்டும். |
| (ii) | 2023 டிசம்பர் 31, இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருவாய் அறிக்கையில் (ஏசீஏ -ஐ) வசூலிக்கப்பட்ட வருவாய்த் தொகை மதிப்பு ரூபா.68,459,891 ஆக இருந்தது, ஆனால் அது ரூபா.68,460,691 நிலுவை வருவாய் அறிக்கையில் (ஏசீஏ - I (i))), ஆக ரூபா.800 வித்தியாசம் காட்டியது. | வருமான அறிக்கையின் (ஏசீஏ **1**) மற்றும் (ஏசீஏ **1** (i)) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் வருவாய் தொகையின் மதிப்பு ரூபா.68,500,966 சரியாக இருக்க வேண்டும், தவறுதலாக இது (ஏசீஏ **1**) இல் ரூபா.68,459,891 என்றும் (ஏசீஏ **1** (i)) இல் ரூபா.68,460,691 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | நிதிநிலை அறிக்கையில் நிலுவை வருமானம் சரியாகக் காட்டப்பட வேண்டும். |
| (iii) | 2023 டிசம்பர் 31, நிலவரப்படி, நிலுவையாகவுள்ள வருமான அறிக்கையில் (ஏசீஏ I(i)) ஆரம்ப நிலுவை ரூபா.301,540,829 ஆக இருந்தது, ஆனால் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி, நிலுவை ரூபா.302,922,679 ஆக இருந்ததுடன், ஆரம்ப நிலுவை ரூபா.1,381,850 ஆல் குறைத்து காட்டப்பட்டது. | 2022 வருடத்தின் நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இறுதி நிலுவை ரூபா.302,922,679, அது விடுப்பட்ட கடன் மதிப்பை சரிசெய்து 2023 ஜனவரி 01 திகதிக்கு சரியான நிலுவை ரூபா.304,959,554 ஆகும். விடுப்பட்ட கடன் மதிப்பை சரிசெய்து நிலுவை வருவாய் அறிக்கையில் ரூபா.301,540,829 என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வருவாய் அறிக்கையில் ஆரம்ப நிலுவை சரியாக பரிந்துரைக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஏசீஏ I(i)இன் நிலுவை வருவாய் அறிக்கையின் படி பெற வேண்டிய வருடத்திற்குறிய பணப் பெறுமதி ரூபா.88,412,643 ஆகும், 2023 டிசம்பர் 31 திகதிக்கு நிலுவை வருவாய் ஏட்டின்படி இப் பெறுமதி ரூபா.88,257,968 ஆனதுடன் ரூபா.154,675 ஆன வித்தியாசம் இருந்தது. | நிலுவை வருவாய் அறிக்கையின் படி ரூபா. 88,412,643 ஆகும் அறிக்கை செய்யப்படும் வருடத்திற்குப் பொருத்தமான நிலுவை வருவாய் ஏட்டின்படி ரூபா.88,257,968 ஆக திருத்தப்பட வேண்டும். | நிலுவை வருவாய் அறிக்கையின் படி படி நிலுவை பெறுமதி சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |
| (v) | மேல்கூறப்பட்ட (ii),(iii),(iv) மாற்றங்களை செய்தப்பின் 2023 டிசம்பர் 31 திகதிக்கு நிலுவை வருமானம் ரூபா.322,720,756 நிலுவை வருவாய் ஏட்டின்படி ரூபா.324,716,556 ஆகும்இ ரூபா.1,995,800 ஆன வித்தியாசம் உள்ளது. | மேல்கூறப்பட்ட (ii),(iii),(iv) மாற்றங்களை செய்தப்பின் 2023 டிசம்பர் **31** திகதிக்கு நிலுவை வருமானம் ரூபா.324,716,556 ஆகும், அதன்படி நிலுவை வருவாய் ஏட்டின்படி ரூபா.321,492,781 ஆன தொகையாக மாற வேண்டும். | சரியான நிலுவை வருமானம் காட்டப்பட வேண்டும். |
| (vi) | ஏசீஏ - (i) கூற்றின் கடந்த வருடத்திற்கு முந்தைய வருட பெறப்பட்ட நிலுவை வருமானம் ரூபா.23,118,010 ஆகும். 2023 பெறப்பட்ட நிலுவை வருமானம் துணைஏட்டின் படி ரூபா.23,117,210 ஆகும். அதன்படி ரூபா.800 ஆன வித்தியாசம் உள்ளது. | ஏசீஏ - (i) கூற்றின் கடந்த வருடத்திற்கு முந்தைய வருட பெறப்பட்ட நிலுவை வருமானம் ரூபா.23,118,010 ஆகும். இது ரூபா.23,158,285 என சரியாக இருக்க வேண்டும். | நிலுவை வருமானம் மீட்பானது சரியாகப் காட்டப்பட வேண்டும் |
| (vii) | 2023 வருடத்தின் நிதி அறிக்கையில் (ஏசீஏ -I) தேறிய வருமானம் ரூபா.124,556,616 ஆகும், ஏசீஏ -I(iii) படிவத்தில் உண்மையான வருமானம் ரூபா.124,597,691 ஆகும். அதன்படி ரூபா.41,075 ஆன வித்தியாசம் உள்ளது. | ஏசீஏ -I(iii) படிவத்தின் படி உண்மையான வருமானம் ரூபா.124,597,691 சரியான பெறுமதியாகும், அதன்படி (ஏசீஏ**1)** குறிப்பிடப்பட்ட தேறிய வருமானம் ரூபா. 124,597,691 ஆக சரியானதாக காட்டப்பட்டுள்ளது. | தேறிய வருமானம் சரியாக காட்டப்பட வேண்டும். |
| (viii) | 2023 வருடத்தின் வருமான அறிக்கை மற்றும் திறைசேரியினால் அச்சிடப்பட்ட SA - 20 மாத வருமான சாராம்சத்தின் படி ரூபா.41,075 வேறுபாடு காணப்பட்டது. | திறைசேரியினால் அச்சிடப்பட்ட SA – 20 மாத வருமான சாராம்சத்தின் படி ரூபா.124,597,691 வருமானமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது | வருமானம் சரியாக காட்டப்பட வேண்டும். |

**(ஆ) சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள்**

சொத்து ஆலை மற்றும் உபகரணக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 வருடத்தில் அகற்றப்பட்ட பொருட்கள் விற்பனை மூலம் வருமானம் ரூபா.47,600 நிதிக்கூற்றில் காட்டப்பட்ட போதிலும், ரூபா.663,396 அகற்றப்பட்ட பொருட்களின் மதிப்பு, நிதியல்லாத சொத்துகளின் அறிக்கையில் அகற்றப்பட்ட சொத்தாகக் காட்டப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான அகற்றல் மதிப்புகள் சிகாஸால் சரியாகக் கணக்கிடப்பட்டிருந்தாலும் தொழில்நுட்பப் பிழை காரணமாக, சிகாஸ் இணையப் பயன்பாடு மூலம் பெறப்பட்ட நிதி அல்லாத சொத்துகளின் அறிக்கையில் தொடர்புடைய மதிப்புகள் காட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. | நிதியல்லாத சொத்துகள் அறிக்கையானது அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்களை துல்லியமாக குறிப்பிட வேண்டும். |

**(இ) கட்டுநிதி**

மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்கள பரீட்சை மீதி சரிபார்ப்பின்படி, மற்ற தலைப்புக்களின் சார்பாக அறிக்கையிடல் நிறுவனம் செய்த செலவுகள் ரூபா.866,360 ஆகும். இது ரூபா. 97,800 எனக் குறிப்பிட்டுள்ளதால் கட்டுநிதி இணக்க அறிக்கையில் ரூபா.768,560 ஆல் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | ரூபா.768,560 யானது தொகை மற்ற தலைப்புக்களுக்காக அறிக்கையிடல் நிறுவனத்தால் முற்பண 'பீ' கணக்கிற்காக செய்யப்படும் வரவுப்பதிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கட்டுநிதி ஒப்பீட்டு அறிக்கையில் சரியான செலவுகள் காட்டப்பட வேண்டும். |
| (ii) | ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தால் முற்பண 'பீ' கணக்கிற்காகச் செய்யப்படும் வரவுகள் திணைக்கள பரீட்சை மீதியிக் படி ரூபா.60,000 ஆகும். இது ரூபா.768,560 ஆக இருந்த போதிலும், கட்டுநிதி இணக்க அறிக்கையில் ரூபா.708,560 ஆல் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | ரூபா.768,560 ஆன தொகை ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடல் நிறுவனத்தால் முற்பண 'பீ' கணக்கிற்காக செய்யப்படும் வரவுப்பதிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ரூபா.60,000 தொகையை முன் கூட்டியே சரிசெய்தமையால் இது கட்டுநிதி இணக்க அறிக்கையிலிருந்து நீக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. | முற்பண "பீ" கணக்கிற்கு எதிரான வரவுப் பதிவுகள் , சரியாகக் கட்டுநிதி ஒப்பீட்டு அறிக்கையில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தால் முற்பண 'பீ' கணக்கிற்காகச் செய்யப்படும் செலவுப்பதிவுகள் ரூபா.10,937,503 ஆனபோதும் ரூபா.10,877,503 ஆக ரூபா.60,000 ஆல் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | ரூபா. 60,000 காசுகள் பெறப்பட்ட கணக்குகளில் நிகழ்ந்த தவறானது சரிசெய்யப்பட்டுள்ளது. | முற்பண "பீ" கணக்கிற்கு எதிரான செலவுப் பதிவுகள், சரியாகக் கட்டுநிதி ஒப்பீட்டு அறிக்கையில் காட்டப்பட வேண்டும். |

**(ஈ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் முறையாக பேனப்படாமை**

திணைக்களத்தரல் கீழ்கண்ட ஏடுகள் நாளதுவறையாக்கப்பட வில்லை என மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாகன பதிவு புத்தகம் திணைக்களத்தால் நிதிப் பிரமாணக் கோவையின் 1645 (அ) பிரகாரம் 09 வாகனங்கள் தொடர்பான லொக் பதிவு புத்தகங்கள் நாளதுவறையாக்கப்பட வில்லை. | எதிர்காலத்தில் இவ்வாரான பிழைகள் இல்லாத வகையில் செயல்படும் வகையில் தொடர்புடைய துறைக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி இருக்கின்றோம். . | நிதிப் பிரமாணக் கோவையின் 1645 (அ) ஹிகாட் விதிகளுக்கமைய பொது 267 படிவத்திற்கமைய வாகன லாக் புத்தகங்கள் ஒவ்வொரு வாகனத்திற்கும் பேணப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 128 (2) (உ) பிரகாரம் அரச வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரசிற்கு பெறவேண்டியுள்ள நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவது தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டிய போதும், 2023 திசெம்பர் 31 திகதியளவில் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா.324,716,556 ஆக இருந்த போதிலும் அந்நிலுவை மீதியினுள் 10 ஆண்டுகளை விஞ்சிய ரூபா.105,441,141 உம், 07 இற்கும் 09 இற்குமிடையிலான ரூபா.38,786,239 உம், ஆண்டு 04 முதல் 06 வரை | 2023 ஆண்டுக்கான விலை உயர்த்தப்பட்டதால் முந்தைய ஆண்டுகளுக்கு மதிப்பிலான வருமானம் உயர்ந்த விலையில் பெறப்படுகிறது, நிலுவை வருமானத்தை அறவிட திணைக்களத்தால் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், நீதி அமைச்சு செயலாளர் தலைமையில் நீதி அமைச்சு செயலாளர் தலைமையில் இந்த நிதிக் கடன் தொடர்பான விவாதம் 2024 மார்ச் 25 ஆம் திகதி நடைபெற்ற போது, இந்த கடனமீதி கொடுப்பனவு தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.35,561,472 உம், ஆண்டு 01 முதல் 03 வரை ரூபா.56,669,736 உம் உள்ளடக்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | நடைமுறை வருடத்தின் நிதிப் பிரமாண பிரகடனத்தின்படி கடந்த ஆண்டுகளுக்குப் பொருத்தமான நிலுவை வருமானம் ரூபா.239,837,828 ஆகும். ஆகியவற்றில், நடைமுறை வருடத்தில் இந்த சமகாலத்திற்குப் பொருத்தமான வருவாய் ரூபா.23,117,210 ஆகும். இது 10 சதவீதம் போன்ற குறைந்த மதிப்பைக் கொண்டு வந்தது.<br><br>2022 வருடத்தின் போது 10 வருடங்கள் க்கு அதிகமாக இருக்கும் 2005 – 2012 வரையிலான காலத்திற்கு பொருத்தமான நிலுவை வருமானம் ரூபா.96,802,469 ஆகும். இதில் ரூபா.5,818,810 அல்லது 6 சதவீதம் 2023 வருடத்தில் அறவிடப்பட்டது. | மேலே 2.1(அ)இல் பதில் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | வருமான துணை பதிவேட்டின்படி 2005 வருடத்தில் இருந்து வழங்கப்பட்ட சேவைக்கான கட்டணத்தை பெறல் தொடர்பாக 13 நிறுவனங்களுக்கு மீண்டும் மீண்டும் சேவை வழங்குவது தொடர்பாக 2005 வருடம் முதல் 2023 வரையான ரூபா.35,519,200 பெற வேண்டிய சேவைக் கட்டணமாகக் காணப்பட்டது. | வழங்கப்பட்ட காலவரையரை நிறுவனத்தில் இருந்து கடன் நிலுவை செலுத்தாது உள்ள நிலையில் மீண்டும் வழக்கு விசாரணைக்கு வரும் நிலையில் வழக்கு விசாரணையை மறுக்க முடியாது மீண்டும் மீண்டும் சேவை வழங்குவதற்கு வாய்ப்பு உள்ளது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாணத்தின் 175 (2) பிரகாரம் நிலுவை தொகை தொடர்பாக, தாமதமின்றி சட்டப்பூர்வமாக அறவிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 60 நிறுவனங்களின் நிலுவை வருமானம் ரூபா.6,777,170 அறவீடானது 03 வருடம் முதல் 18 வருடம் வரையான காலம் கழிந்து இருந்தது, இது தொடர்பில் திணைக்களம் செயல்பட தவறியது. | தொடர்புடைய நிறுவனம் 60 தொடர்பாகவும் கடனை மீளப் பெறுவதற்குப் பின்பற்றப்படும் செயல்பாட்டின் படி நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் இந்த வருடத்தில் ஆண்டு 10-க்கு மேல் கடனைப் பெறுவதற்குப் முன்னுரிமை வழங்குவதுடன் மேலகிக நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கடன்பட்டோர் பேரேட்டு மாதிரிச் சரிபார்ப்பின்படி, 2020, 2021, 2023 ஆம் ஆண்டுகளுக்கான தொடக்க இருப்பு மற்றும் இறுதி இருப்புத் தொகையை தெளிவாக அடையாளம் காணக்கூடிய வகையில், கடன்பட்டோர் பேரேடு பேணப்படவில்லை. ஆண்டு தொடர்பான நிலுவைத் தொகை சரியானது என்பது குறித்து முறையான உறுதிப்படுத்தலைப் பெற முடியவில்லை. | கூட்டுத்தாபண கணக்கு கிளையின் கணக்கு பதிவு நடவடிக்கைகளின் தொடக்கத்திலிருந்து கணினி தொழில்நுட்பத்திற்கமைய செய்யப்படுவதில்லை என்பதுடன் இந்த கடன் நிலுவைகள் பல பழைய கணினி தரவுகளை இணைப்பதன் மூலம் பராமரிக்கப்படுகின்றன, சில கடன்கள் பதிவின்போது தவறவிடப்பட்டுள்ளதுடன் அதனை மீண்டும் சேர்ப்பதால், இந்த கடன் நிலுவையில் வேறுபாடு காட்டப்பட்டுள்ளது. | நிலுவைகள் அடையாளம் காண கூடிய வகையில் கடன்பட்டோர் கணக்கில் மீதி பேண ப்பட வேண்டும். |
| (ஊ) | 20 ஜுலை 2015 திகதியிட்ட நிதிக் கொள்கை சுற்றறிக்கை எண். 01/2015 இன் படி அரசு வருவாயை மதிப்பீடு செய்தல், வசூல் செய்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கை செய்தல் குறித்த வழிகாட்டுதல்களின் 04 வது பிரிவின்படி வருவாய் நிர்வாகம் மற்றும் கணக்கியலை மேம்படுத்த, மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் கொள்கை பகுப்பாய்வு பதிவேடுகளை ஒழுங்கான முறையில் பராமரிப்பது இன்றியமையாதது, மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள (அ), (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றின் படி திணைக்களம் செயல்படத் தவறிவிட்டது. | எதிர்காலத்தில் தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் விதிமுறைகளை செயல்படுத்தப் போவதாகத் தெரிவிக்கப்படும். | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவின வகுப்பு 04 உம் மற்றும் மூலதன செலவின வகுப்பு 04 க்காகன ஏற்பாடுகளில் ரூபா.327,500,000 உம் ரூபா.104,510,202 உம் மீதம் இருந்த நிலையில், இது 27 முதல் 97 சதவீதம் வரையாக காணப்பட்டது. | 03/2022 பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி செலவுக் கட்டுப்பாடு மற்றும் கொள்முதல் கட்டுப்பாடு காரணமாக தொடர்புடைய செலவு வகுப்பு சேமிப்பும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. | போதுமான பாதீட்டு தயாராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒரு மூலதனச் செலவு வகுப்பு க்கு உரிய மொத்த ஒதுக்கீடான ரூபா.9,000,000 வும் மீதமாக இருந்தது. | மேலே 2.2(அ) பதில் பொருத்தமான து. | முறையான ஆய்வுடன் செலவு பாதீட்டு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 27 ஜனவரி 2023 திகதியிட்ட பாதீட்டுச் சுற்றறிக்கை எண். 01/2023 இன் பத்தி 02(இ)(ii) இன் படி செலவு வகுப்பு 1403க்கான செலவுக் குறைப்புசெலவு வகுப்பு 1201க்கான கடுமையான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இருப்பினும்<br><br>நிதிப் பிரமாணத்தின் 66 விதிமுறைகள் மூலம் முறையே ரூபா.9,000,000 மற்றும் ரூபா.7,000,000, ஆனது 18 சதவீதம் மற்றும் 58 சதவீதம் வரை ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டு செலவுகள் செய்யப்பட்டுள்ளன. | புதிய கட்டிடம் முழுவதுமாக பாவணைக்குட்பட்டதால் மின்சாரம் மற்றும் நீர்கடடச் செலவு அதிகரிப்பு மற்றும் எழுதுகருவிகளின் விலை உயர் அதிகரிப்பு காரணமாக ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டுள்ளன. | குறிப்பிடப்பட்ட சுற்றரிக்கையின் பிரகாரம் விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 30 நவம்பர் 2023 திகதியிட்ட அரச கணக்கு வழிகாட்டி எண். 05/2023 இன் பத்தி 3.3 இன் படி ரூபா.7,606,240, பொறுப்புகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளில் வழங்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளின் அறிக்கையில் இது சேர்க்கப்படவில்லை. | கடந்த ஆண்டு செலுத்த வேண்டிய தண்ணீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி கட்டணங்கள் தாமதமாக வருவதால் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளின் பதிவேட்டில் பதிய முடியாது என தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட சுற்றரிக்கையின் பிரகாரம் விதிமுறைகளுக்கமைய பொறுப்புக்கள் வெளிக்காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | நிதிப் பிரமாணத்தின் 94(i) படி வேறு ஏதேனும் ஒரு வகையில் விதிமுறைகள் வடிவமைக்கப்பட்டாலேயன்றி வருடாந்தர பாதீட்டின்படி நிதி ஒதுக்கம் இருந்தால் எந்த செலவிற்கும் அல்லது பொறுப்பும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை, 229–1–1–1409 செலவு வகுப்பின் கீழ் மீதி ரூபா.577,652 ஆகும், ஏற்பாடுகளுக்கு மேலதிகமான பொறுப்புக்கின் மதிப்பு ரூபா.3,445,301 ஆகும். | 229-01-01-1409 தேவைப்படும் செலவு வகுப்பின் கீழ் விண்ணப்பம் செய்யப்பட்ட முழுப் ஒதுக்கமும் கிடைக்கவில்லை. மிகவும் அவசியமான செலவை செய்வதற்கான ஒதுக்கம் போதாத நிலையில் ஏற்பாடுகளுக்கு அதிகமான பொறுப்புக்களுக்கு ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாணத்தின் விதிமுறைகளுக்கமைய ஏற்பாடுகளுக்கு அதிகமான பொறுப்புக்களுக்கு ஒப்புக்கொள்வதனை தவிர்க்க வேண்டும். |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்ய வேண்டியதுடன், அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை பயனுறுதிமிக்கதாக பேணிச்செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியதாகவும், அம் மீளாய்வை எழுத்து மூலமாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிருந்த போதும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | திணைக்களத்தின் தலைமை உள்ளக் கணக்காய்வாளரிடமிருந்து திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள உள் கட்டுப்பாட்டு அமைப்பைப் பேணுதல தொடர்பாக முன்மொழியப்பட்ட உண்மைகள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு, கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மீளாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38 இன் விதிகளைப் பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தினுள் தயாரிக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால உறுதிப்படுத்த வேண்டியதுடன், மேலதிகமாக கணக்காய்வுச் செய்யப்படும் நிறுவனம் தொடர்புடைய வருடாந்திர அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முதன்மைக் கணக்கீட்டு அதிகாரிகளின் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றாலும், அறிக்கையின் 3.3 (அ) பந்தியீல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்பு தொடர்பான தேவை நிறைவேறப்படவில்லை. | இதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் உரிய காலங்களில் அறிக்கைகளை சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38 இன் விதிகளைப் பின்பற்ற வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுத்தாய்வு செய்து காட்டப்பட்டுகிறது.

| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **அவதானிப்புக்கள்** **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 104 (3) | | 28 வாகன விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கைகள் 14 நாட்கள் முதல் 10 மாதங்கள் வரை தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டன. | நிதிப் பிரமாணத்தின் விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 104(4) | | 2023 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 28 வாகன விபத்துக்கள் தொடர்பான இறுதி அறிக்கைகள் நிதிப் பிரமாண விதிகளின்படி சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாண விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 137 | 3,338,973 | நிதிப் பிரமாண விதிமுறைகளுக்கு அமைய அனைத்து தகுதியும் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் அனைத்து கொடுப்பனவுகளும் அனுமதிக்கப்பட வேண்டும் என்றாலும், 04 வவுச்சர் தொடர்பில் அவ்வாறு அனுமதிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாண விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 237 (அ) (i) | 772,287 | நிதிப் பிரமாண விதிமுறைகளுக்கு அமைய சேவைகள் மற்றும் 15 திருத்தற் செலவுகளுக்குப் பணம் செலுத்துவதற்குப் பொறுப்பான அதிகாரி ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | நிதிப் பிரமாண விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1642 | 03 வாகனங்களுக்கு நடந்த விபத்துக்கள் 06 க்கு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் காவல்துறைக்கு புகார் அளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாண விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ii)** | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>• 2016 டிசம்பர் 29 திகதி எண் 30/2016 சுற்றறிக்கையின் 3.1 வது பந்தி | வாகனம் 09 பொருத்தமானது சுற்றறிக்கைக்கு அமைய எரிபொருள் எரிப்பு பரிசோதிக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கைகளுக்கு அமைய எரிபொருள் எரிப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது | குறிப்பிடப்பட்ட சுற்றரிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிப்பு பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும். |
| | • சுற்றறிக்கை எண். 05/2008 மற்றும் 05/2008 (i) 2008 பெப்ரவரி 06, மற்றும் 2018 ஜனவரி 24, திகதியிடப்பட்டது | திணைக்களம் இன்னும் குடிமக்கள்/வாடிக்கையாளர் சாசனத்தை அறிமுகப்படுத்தவில்லை. | திணைக்களத்தின் குடிமக்கள்/வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டு, ஒப்புதலுக்காக 2024 பெப்ரவரி 13, அன்று அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட சுற்றரிக்கையின் பிரகாரம் செயல்பட வேண்டும். |

| **2.6** | **முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 371 (2) பிரகாரம், உப கட்டுநிதியொன்றை வழங்கியதன் பின்னர் குறித்த பணியை பூர்த்தி செய்து 10 நாட்களுக்குள் அக் கட்டுநிதியை் தீர்க்க வேண்டிய போதும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா.660,341 முற்பணங்கள் தொடர்பில் அதற்கேற்ப கையாளப்படவில்லை. | உப கட்டுநிதியை தீர்க்க பல நாட்கள் தாமதமானது, எதிர்காலத்தில் இவ்வாறான காலதாமதம் ஏற்படாதவாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாண விதிமுறைகளின்படி, உப கட்டுநிதியை எந்த தாமதமும் இன்றி தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 371 (4) பிரகாரம் குறித்த மற்றும் தேவையற்ற பணிகளிற்காக உப கட்டுநிதி பெறக்கூடாத போதும், முன்பணமாக ரூபா.5,000 எடுக்கப்பட்டு, அதே தொகை மீண்டும் பணமாக செலுத்தப்பட்டது. தேவையான பணியை குறிப்பிடாது 10 சந்தர்பங்களில முன்பண கொடுப்பணவு செய்யப்பட்டுள்ளது. | முன்பணம் பெறும்போது தேவையான காரணத்தை குறிப்பிடும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாண விதிமுறைகளின்படி, தேவையற்ற விடயம் தொடர்பில் உப கட்டுநிதியை வழங்குவதை தவிர்க்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28, திகதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல. 02/2020 இன் பத்தி 03 இன் படி, எதிர்வரும் ஆண்டிற்கான வருடாந்திர செயல் திட்டம் நடைமுறை ஆண்டின் டிசம்பர் 15 க்கு முன் தயாரிக்கப்பட்டு, முதன்மை கணக்காய்வு அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட வேண்டும், ஆனால் 2023 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் 2023 மார்ச் 8, அன்று கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டது. | குாலதாமத பிழை காரணமாக 2023ம் ஆண்டு தொடர்பான வருடாந்திர செயல்திட்டம் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், 2024ம் ஆண்டு, உரிய நேரத்தில் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின்படி குறிப்பிட்ட திகதியில் வருடாந்திர செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 விரும்பிய அளவிலான முடிவை அடையவில்லை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **2023** செயல் திட்டத்தின் படி, அதிகாரிகள் பயிற்சி, புதிய கட்டிடத்திற்கு தளபாடங்கள் வாங்குதல் மற்றும் குழந்தை துஷ்பிரயோக வழக்குகளின் காலதாமதத்தைக் குறைக்க நீதிமன்ற நடைமுறைகள், செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கான வசதிகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டு ரூபா.2 மில்லியனும், ரூபா.80 மில்லியனும் மற்றும் ரூபா.10 மில்லியனும் ஒதுக்கப்பட்டு இருந்தாலும், அதன் உண்மையான பெறுபேறு முறையே ரூபா.0.98 மில்லியனும், ரூபா.49.41 மில்லியனும் மற்றும் ரூபா.5.23 மில்லியனுமாக இருந்ததுடன் சதவீதமாக குறிப்பிடும் போது 49 உம் 62 உம் மற்றும் 52 மாகும். | புதிய கட்டிடத்திற்கான தளபாடங்கள் வாங்குவதற்கு விநியோக உத்தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் வழங்குநர்களால் பொருட்கள் வழங்கப்படவில்லை. மத்திய பொறியியல் பணியகத்தின் பரிந்துரைகளின்படி, பொருட்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக, பட்டியல்கள் திருத்தப்பட்டன மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டதால், அதற்கான ஏற்பாடுகள் மீதமாகக் காணப்பட்டன. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளின் காலதாமதத்தைக் குறைப்பதற்கான நீதித்துறை நடைமுறைகள் மற்றும் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கு வசதியாக யுனிசெ.்.ப் நிதியை வழங்குவதில் தாமதம் காரணமாக ஏற்பாடுகள் மீதமாகக் காணப்பட்டன. | செயல் திட்டத்திற்கு ஏற்ப செயல்கள் தொடர்பான நிதி பாவனை செய்ய வேண்டும். |
| (ஆ) | புதிய கட்டிடத்தின் கட்டுமான பணிக்காக ரூபா.10 மில்லியன் ஒதுக்கி இருந்தாலும், எந்த ஒரு காரியமும் நடைபெறவில்லை. | பதில்கள் கிடைக்கவில்லை | செயல் திட்டத்திற்கு ஏற்ப செயல்கள் தொடர்பான நிதி பாவனை செய்ய வேண்டும். |

## 3.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டியதாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28, திகதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல. 02/2020 இன் பத்தி 12.1 இன் படி, ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை மும்மொழியில் தயாரிக்கப்பட்டு. 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது நிதியாண்டு முடிவடைவதற்கு 150 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 05 மாதங்கள் மற்றும் 06 நாட்கள் கால தாமதத்துடன் 2023 ஆம் ஆண்டு நவம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. | கால தாமதப் பிழையால் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்பிப்பதற்கு, எதிர்வரும் காலங்களில் உரிய நேரத்தில் அறிக்கையை சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின்படி வருடாந்திர செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு குறிப்பிட்ட நாளுக்கு முன்வைக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28, திகதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல. 02/2020 இன் பத்தி 10.2 இன் படி, 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வு சட்டம் இல. 19 இன் பிரிவு 16(2) இன் படி நிதிநிலை அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்திர செயலாற்றுகை அறிக்கை நிதிநிலை அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில்கள் கிடைக்கவில்லை | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின்படி நிதிக் கூற்றுடனான வருடாந்திர செயலாற்றுகை அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும் |

### 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 08, தகதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல. 02/2020 இன் படி தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் மீண்டெளும் செலவுகள் | சுற்றறிக்கையின்படி, தயாரிக்கப்படும் கொள்முதல் திட்டத்தில் எழுதுபொருள் கொள்முதல் சேர்க்கப்படவில்லை, எழுதுபொருள் கொள்முதல் சேர்க்கப்படாமல், | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின்படி மற்றும் பெறுகை வழிகாட்டுதல்கள் விதிமுறைகளுக்கமைய |

| | | | |
|---|---|---|---|
| | சேர்க்கப்படவில்லைஇ திணைக்களம் 2350 பாதீட்டுக்கான A4 வகை நகல் தாள்களை ரூபா.3,550,442 செலவில் மீளாய்வாண்டின் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை திட்டமிடாமல் 06 தடவைகளில் கொள்வனவு செய்துள்ளது.<br>2023 பிப்ரவரி முதல் அக்டோபர் வரையிலான 13 காலகட்டங்களில் ரூபா.854,550 மதிப்புள்ள பிரிண்டர்களுக்கான டோனர் வாங்கப்பட்டது. மேலும், கொள்முதல் வழிகாட்டுதல்களின் 6.3.1 இன் படி தொடர்புடைய ஏல ஆவணங்கள் சீல் செய்யப்பட்ட உறையின் கீழ் சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் மேற்படி ஏல ஆவணங்கள் பெறப்பட்ட திகதியும் முத்திரையிடப்படவில்லை. | அவசரத் தேவைகளின் அடிப்படையில் டோனர் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு ஆர்டரின் மதிப்பு ரூபா. 100,000 க்கும் குறைவான கொள்முதல். மேலும், களஞ்சியசாலையில் உள்ள இடம் குறைவாக உள்ளதாகவும், ஒரே நேரத்தில் இரண்டு (2) மாத காலத்திற்கான நகல் காகிதத்தை மட்டுமே சேமித்து வைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.. | நடவடிக்கை எடுக்கவும். |
| (ஆ) | கொள்முதல் வழிகாட்டுதல்களின் பிரிவு 3.6.1 (இ) இன் படி, ஆரம்ப கட்டளைக்குப் பிறகு பொருட்களின் விலைகள் குறையவில்லை என்றால், குறுகிய காலத்திற்குள் முதல் வழங்குனரிடமிருந்து மீண்டும் கட்டளை செய்ய முடியும். சந்தை விலையை மாற்றியமைக்காமல் 04 தடவைகளில் முதல் வழங்குனரிடமிருந்து ரூப.1,466,090 பெறுமதியான A4 வகை நகல் காகிதத்தின் 950 பொதிகள் கொள்வனவு செய்யப்பட்டன. | கொள்முதல் வழிகாட்டுதல்களின் பிரிவு 3.6.1 இன் படி, அசல் வழங்குனரிடமிருந்து கட்டளைகள் குறுகிய காலத்திற்குள் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது, ஏனெனில் அசல் வழங்குனரிடமிருந்து ஆறு மாதங்களுக்குள் அதே பொருட்களை மீண்டும் கட்டளை செய்யலாம் என குறிப்பிட்டுள்ளது. | பரிந்துரைக்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டுதல்கள் கையேட்டின் விதிகளை பின்பற்றப்படும். |
| (இ) | கொள்முதல் வழிகாட்டுதல்கள் கையேட்டின் பத்தி இல. 4.2.1 இன் படி, குறைந்தபட்சம் 03 ஆண்டுகளுக்கு எதிர்பார்க்கப்படும் கொள்முதல் நடவடிக்கைகள் உட்பட ஒரு முதன்மை கொள்முதல் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | 03 வருட காலத்திற்கு எதிர்பார்க்கப்படும் கொள்வனவு நடவடிக்கைகள் உட்பட பிரதான கொள்வனவுத் திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் பிரதான கொள்வனவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது | பரிந்துரைக்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டுதல்கள் கையேட்டின் விதிகளை பின்பற்றப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கொள்முதல் வழிகாட்டுதல்களின் பத்தி இல. 3.4.3 இன் படி, பொருளாதார ரீதியாக பின்தங்கிய பொருட்களை வாங்குவதற்கு குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களின் பதிவு பராமரிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் வழங்குனர்களை பதிவு செய்யவும், வழங்குனர்களின் பதிவேட்டை பராமரிக்கவும் பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | பரிந்துரைக்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டுதல்கள் கையேட்டின் விதிகளை பின்பற்றப்படும். |
| (உ) | 2023 ஆம் ஆண்டிற்கான துப்புரவுப் பணிகளுக்காக, 2023 ஜனவரி 20, அன்று மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட செய்தித்தாள் விளம்பரங்களுக்கு 05 நிறுவனங்களிடமிருந்து விலைமனு பெறப்பட்டன, ஆனால் அறிக்கையின் திகதி வரை, சேவைக்கு ஒரு ஒப்பந்ததாரர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. | இந்த விலைகளை சமர்ப்பித்த நிறுவனங்கள் விலைமனு அழைப்பின் போது முன்வைக்கப்பட்ட அடிப்படைத் தேவைகளில் உள்ள குறைபாடுகள் குறித்து விலைமனு கோறல் சபை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இடையே உடன்பாடு இல்லாததால் 2023 இல் துப்புரவு சேவைக்கான ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை என்று தெரிவித்தன. | துப்புரவு பணிகள் தொடர்பான கொள்முதல் சரியான நேரத்தில் செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டு 2023 பெப்ரவரி 28, அன்று செய்யப்பட்ட ஒப்பந்தம் காலாவதியானதால். 2023 மார்ச் 01 முதல் ஆகஸ்ட் 20, வரையிலான காலக்கட்டத்தில், தற்போதைய துப்புரவு சேவை வழங்குநரிடமிருந்து சேவையைப் பெற 2023 மார்ச் 10 மற்றும் ஜூலை 27 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கொள்முதல் குழுக்கள் முடிவு செய்திருந்தாலும், 2023 ஆம் ஆண்டிற்கான ரூபா.14,194,147 சரியான செயல்திறன் உத்தரவாதம் மற்றும் அந்தக் காலத்திற்கான முறையான எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் இல்லாமல் செலுத்தப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான, 2021 ஆம் ஆண்டில் துப்புரவு சேவைக்காக, விலைமனுக்கள் அழைக்கப்பட்டு, கொள்முதல் செயல்முறையைத் தொடர்ந்து ஒரு வழங்குனர் தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் எழுத்துப்பூர்வ ஒப்பந்தங்கள் மற்றும் செயல்திறன் பத்திரங்களைப் பெறுவதில் குறைபாடு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. | செயல்திறன் பத்திரம் மற்றும் தொடர்புடைய காலத்திற்கு எழுதப்பட்ட ஒப்பந்தம் இல்லாமல் பணம் செலுத்தப்படலாகாது. |
| (எ) | 2023 ஜனவரி 15, மற்றும் 2023 ஜூன் 10, க்கு இடையில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பாதுகாப்புச் சேவை பெறப்பட்டாலும், அந்த காலத்திற்கான சரியான செயல்திறன் உத்தரவாதம் மற்றும் முறையான எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் இல்லாமல் | 03 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டதன் காரணமாக, இரு தரப்பினருக்கும் இடையில் செல்லுபடியாகும் செயல்திறன் உத்தரவாதங்கள் மற்றும் முறையான எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் கையெழுத்திடப்படவில்லை, ஏனெனில் சம்பந்தப்பட்ட நிறுவனம் சம்பந்தப்பட்ட காலத்திற்கு | செயல்திறன் பத்திரம் மற்றும் தொடர்புடைய காலத்திற்கு எழுதப்பட்ட ஒப்பந்தம் இல்லாமல் பணம் செலுத்தப்படலாகாது. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.4,077,611 இந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது. | திணைக்களத்திற்கு சேவையை வழங்கியுள்ளது. பெறப்பட்ட சேவைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டது. | |
| (ஏ) | 2023 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான கொள்முதல் வழிகாட்டுதல்களின் பிரிவு 5.4.8 (ஆ) இன் படி நிறுவனத்தால் வழங்கப்படும் செயல்திறன் பாதுகாப்பு, வேலை முடிவடையும் என எதிர்பார்க்கப்படும் திகதியிலிருந்து 28 நாட்கள் வரை செல்லுபடியாகும். தொடர்புடைய நிறுவனமும் துறையும் 10 ஜூலை 2023 முதல் 2024 ஜூலை 09, வரையிலான ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன, ஆனால் வழங்கப்பட்ட செயல்திறன் உத்தரவாதமானது 28 ஜூன் 2023 முதல் 27 ஜூன் 2024 வரை மட்டுமே செல்லுபடியாகும். | 2023 ஜூன் 10, முதல் 2024 ஜூன் 9, வரையிலான ஒரு வருட காலத்திற்கு பாதுகாப்புச் சேவை ஒப்பந்தம் ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, செயல்திறன் பாதுகாப்பு 10 ஜூன் 2023 முதல் 07 ஜூலை 2024 வரை சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் அதைச் சரிசெய்ய வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைக்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டுதல்கள் கையேட்டின் விதிகளை பின்பற்றப்படும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28, திகதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 இன் பத்தி எண். 11.1 இன் படி, நிதிபிரமாணத்தின் ஒழுங்குமுறையின் பத்தி 756(6) இன் படி, பண்டக கணக்கெடுப்பு சபையின் நியமனம், பண்டகக் கணக்கெடுப்பின் பௌதீக நிறைவு, மற்றும் சரக்கு ஆய்வு அறிக்கையை பெற்றுக் கொள்ளல் போன்ற பணிகள் செய்யப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் பொருட்கள் கணக்கெடுப்புகளை உரிய காலத்திற்குள் மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் விதிமுறைகளின்படி பொருட்கள் கணக்கெடுப்பு பொருட்கள் வேண்டும். |

## 3.6 இழப்புக்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தரை தளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள கழிப்பறை அமைப்பில் இருந்து கழிப்பறை பொருத்துதல்கள் காணவில்லை, 11 வது மாடியில் உள்ள சாப்பாட்டு அறையின் கண்ணாடி கதவு உடைக்கப்பட்டுள்ளது மற்றும் தரை ஓடுகள் வெடித்துள்ளது, மேலும் இந்த இழப்புகள்∴சேதங்கள் குறித்து 103(1) மற்றும் 104(1) நிதிப்பிரமாண ஒழுங்குமுறைகள் கையாளப்படவில்லை. | புதிய கட்டிடத்தில் ஏற்படும் சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான நிதிப்பிரமாண விதிமுறைகளை கையாள்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | பொருந்தக்கூடிய நிதிப்பிரமாண விதிமுறைகளின்படி பரிந்துரைகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இழப்பு பதிவேட்டின்படி ரூபா.25,000க்கு மேற்பட்ட 29 சேதங்களின் பெறுமதி ரூபா.2,878,632, ஆகும், நிதிநிலை அறிக்கையின் இணைப்பு(i) இல் உள்ள இழப்பீடு அறிக்கையின்படி நடைமுறை ஆண்டின் இழப்பீடு/பதிவழித்தல்/தவிர்ப்பு அறிக்கையின்படி சேதங்கள் 28 மற்றும் அதன் பெறுமதி ரூபா.2,814,537 ஆக ரூபா.64,095 குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2023ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் போது, சேதம் தொடர்பான முழு விவரங்களையும் போக்குவரத்துத் துறையினர் பெறவில்லை என்றும், சேதம் மற்றும் இழப்பு பதிவேடு முழுமையடையாததால், அதை பின்னர் சரிசெய்ய முடித்ததால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | இழப்புகள் மற்றும் தள்ளுபடிகள் அறிக்கையில் சேதங்கள் துல்லியமாக பதிவு செய்யப்பட வேண்டும். |

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலுவைத் திகதியில் மின்கட்டணத்தைச் செலுத்தாத காரணத்தால், மாதாந்திர நுகர்வுச் செலவுக்கு மேலதிகமாக ரூபா.372,759 வட்டியை திணைக்களம் செலுத்தியிருந்தது. | உரிய திகதியில் உரிய கட்டுநிதி வராததால் மின்கட்டணம் செலுத்துவதில் காலதாமதம் ஏற்படுவதால், வட்டித்தொகையும் சேர்ந்துள்ளது என்றும், எதிர்காலத்தில் இந்நிலை ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | மின்கட்டணத்தை வட்டி செலுத்தாமல் உரிய திகதியில் செலுத்த வேண்டும். |

## 3.8 முகாமைத்துவத்தின் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவையை விட்டு வெளியேறிய 04 அதிகாரிகளின் நிலுவைத் தொகையான ரூபா.485,842 ஆனது 10 ஆண்டுகளுக்கும் மேலாக வசூலிக்கப்படாமல் உள்ளது, 03 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு அதிகாரியின் நிலுவை ரூபா.127,680, மற்றொரு அதிகாரியின் ரூபா.113,509 கடன் மீதி 1 முதல் 3 ஆண்டுகளாக கட்டணம் செலுத்தப்படவில்லை. | சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடனை வசூலிக்க வழக்குத் தாக்கல் செய்வதற்காக கடன் கோப்புகள் சட்டத்துறையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | கடன் பாக்கியை உடனடியாக வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் |
| (ஆ) | இடைநீக்கம் செய்யப்பட்ட 03 அதிகாரிகளின் நிலுவைத் தொகையான ரூபா.164,560 ஆனது 10 ஆண்டுகளுக்கும் மேலாக வசூலிக்கப்படாமல் இருந்தது. | சம்பந்தப்பட்ட அதிகாரிகளில் ஒருவர் இறந்துவிட்டார், மற்றொரு அதிகாரியின் குடியிருப்பு தகவல்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. மற்றைய அதிகாரியின் மனைவி கடனை தவணை முறையில் செலுத்தி வருவதாகவும், வசூலிக்கப்படாத கடன் பாக்கிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | கடன் பாக்கியை உடனடியாக வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் |
| (இ) | மேலே (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள இடைநீக்கம் செய்யப்பட்ட மற்றும் ஓய்வுபெற்ற அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்க வேண்டிய கடன் நிலுவைகள் குறித்து, நிறுவனங்களின் தாபனக்கோவை XXIV அத்தியாயத்தின் பிரிவு 4.5 மற்றும் 6.3 இன் விதிகள் கையாளப்படவில்லை. | இது தொடர்பான நிலுவைத் தொகைகளை மீட்பதற்காக, நிறுவனங்கள தாபனக்கோவையின் பிரிவு 4.5 மற்றும் 6.3 இன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | பழைய கடன் நிலுவைத் தொகையை மீட்டெடுக்க, குறிப்பிடப்பட்ட தாபன கோவையின் விதிகளின்படி தொடர வேண்டும். |
| (ஈ) | 113(6)(ஆ) பகுதி I, அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 இன் பத்தி 3.1, நிதிப்பிரமாணங்களின் விதிமுறைகளின் கீழ் முற்பண “பி” கணக்கு மூலம் செய்யப்பட்ட கடன்கள் அல்லது முன்பணங்களை மீட்டெடுப்பதற்கான நடைமுறை (இ) மற்றும் (ஈ) வழிகாட்டுதல்களின்படி, | மீளச் செலுத்த முடியாத கடன் நிலுவைகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விடயங்கள் | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணங்களின் விதிமுறைகளின்படி கடனை வசூலிக்க வேண்டும். |

| | |
|---|---|
| சேவையை விட்டு வெளியேறிய மற்றும் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இடைநிறுத்தப்பட்ட ஐந்து அதிகாரிகள் தொடர்பாக ரூபா. 459,837 கடன் பாக்கி தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் எம்எஸ்டீடப்/08/65 கொண்ட நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதத்தின்படி, திணைக்களத்தால் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நிலையான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான இலக்குகள் அடையாளம் காணப்படவில்லை, மேலும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் நிலையான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படவில்லை. | நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டு, திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகள் உருவாக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்ட நோக்கத்தை அடைய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும், மேலும் எதிர்காலத்தில் நிலையான அபிவிருத்தி வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட கடிதத்திற்கமைய செயல்படவும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 நிலவரப்படி, துறையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் 1295 ஆக இருந்தாலும், உண்மையில் 671 பணியாளர்கள் உள்ளபோதும் 624 வெற்றிடங்கள் உள்ளன. இது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் 48 சதவீதமாகும். | புதிதாக 25 அரசு வழக்கறிஞர்களை நியமிக்க நேர்காணல் நடத்தப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு பல தடவைகள் ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் செயல்திறனை நேரடியாகப் பாதிக்கும் 523 முதுநிலைப் வெற்றிடங்கள் உள்ள நிலையில், 2023 டிசம்பர் 31, நிலவரப்படி உண்மையான ஆளணி எண்ணிக்கை 215 ஆக உள்ளதனால் 308 அதிகாரிகளின் வெற்றிடமாக இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் இது 59 சதவீதமாக இருந்தது. | பதில் 5 (அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ளது | வெற்றிடங்கள் இருப்பதால், நிறுவனத்தின் செயல்பாடு பாதிக்கப்படுவதால், வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை முறையே 15 மற்றும் 354 ஆக இருந்தாலும், 31 டிசம்பர் 2023 நிலவரப்படி உண்மையான பணியாளர்களின் எண்ணிக்கை முறையே 07 மற்றும் 157 ஆக உள்ளது, இதன் விளைவாக 205 மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை அலுவலர்கள் வெற்றிடங்கள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் இது 56 சதவீதமாக இருந்தது. | பதில் 5 (அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ளது | வெற்றிடங்கள் இருப்பதால், நிறுவனத்தின் செயல்பாடு பாதிக்கப்படுவதால், வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | முதன்மை நிலையில் அனுமதிக்கப்பட்ட 403 பதவிநிலைகளில், 31 டிசம்பர் 2023 நிலவரப்படி உண்மையான பணியாளர்களின் எண்ணிக்கை 292 ஆக இருந்ததால், 111 அதிகாரிகளின் பதவிநிலைகள் வெற்றிடமாக உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் இது 28 சதவீதமாக இருந்தது. | பதில் 5(அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ளது | வெற்றிடங்கள் இருப்பதால், நிறுவனத்தின் செயல்பாடு பாதிக்கப்படுவதால், வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(உ)** | 2018 ஜனவரி 24 ஆம் திகதி முதல் இல 02/2018 அரசு நிர்வாக சுற்றரிக்கையின் 04 பிரிவின் படி மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரித்து அமைச்சின் செயலாளர் அனுமதிக்காக முன்வைக்கப்படடுள்ளது, கணக்காய்வு அறிக்கையின் திகதி வரை இது அனுமதிககப்படவில்லை, சுற்றரிக்கையின் 01 வது பிரிவின் பிரகாரம் முழு நிர்வாகக் குழுவிற்கான வருடாந்திர செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கையெழுத்திடுவது முடிவடையவில்லை. | தற்போது, திணைக்களத்தின் முழு ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் விதிகளின்படி நடசடிக்கை எடுக்கவும். |